**மகர பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்டம்பர் 13 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மகர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சொத்துக் கூறுகள் 43 இன் பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. | சொத்திக் பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | கொள்வனவு நிறுவனங்கள் மூலமோ மதிப்பீட்டின் மூலமோ பெறுமதி பெறப்பட்டு கணக்கிலிடப்படும். |
| (ii) | ஒரு டபிள் கெப் வண்டியை இரு முறை கணக்கிலிடப்படும் ரூபா 3,178,227 மற்றும் ஆயுர்வேதக் கையிருப்பு ரூபா 319,568 அதிகரித்ததுடன் கணக்கிலிடப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குகளில் திருத்தப்படும். |
| (iii) | வேலைக் கடன் கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 181,971 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | உடன்படிக்கைக்குள்ளான செயற்திட்டத்திற்கு மாத்திரமே நிதி ஏற்பாடு செய்யப்படலாம். | எதிர்காலத்தில் திருத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஐந்து கணக்கீட்டு விடயங்களின் இணக்கமுறாத மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 102,894,979 ஆகும். | வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்கு திருத்தம் செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த ரூபா 379,219 பெறுமதியான 76 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச வருவாயிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,610,456 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் இந்த ஆண்டு தொடக்கம் வருவாயிலிடப்படும். |

## 1.5 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 1-3 ஆண்டுகளுக்குரிய கடன்பட்டோர் மீதி ரூபா 1,981,989 ஆகும். 3-5 ஆண்டுகளுக்குட்பட்ட மீதி ரூபா 2,326,591 ஆகும். | பெறவேண்டிய அறவிட வேண்டும். | மேலும் பெறக்கூடிய மற்றும் பெறமுடியாத மீதிகள் இனங்காணப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு கணக்கு சீராக்கல் செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 1-3 ஆண்டுகளுக்குரிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 34,387,568 ஆகும். 3-5 ஆண்டுகளுக்குரிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 10,818,287 ஆகும். 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பொது வைப்பு மீதி ரூபா 2,093,800 ஆகும். | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். | மேலும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் கொடுப்பனவு செய்ய வேண்டாதெனவும் இனங்காணப்பட்டு பொதுச் சபையின் சமர்ப்பிக்கப்பட்டு கணக்கில் சீராக்கல் செய்யப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 79,033,746 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 36,269,238 ஆகும்.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 11,086,300 | 11,640,113 | 11,353,520 | 4,248,493 | 10,163,000 | 12,980,012 | 9,451,933 | 3,961,900 |
| (ii) | வாடகை | 6,920,000 | 6,901,084 | 6,953,014 | -1,986,894 | 6,573,000 | 6,580,613 | 6,580,613 | (1,934,964) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,580,400 | 2,262,157 | 2,263,157 | -237,664 | 2,461,100 | 1,733,552 | 1,733,552 | (236,664) |
| (iv) | ஏனைய வருமானம் | 150,457,000 | 262,642,532 | 262,698,167 | 505,350 | 260,677,000 | 220,430,096 | 220,430,096 | 560,985 |

#### 2.2.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 3.7 | தீர்வை வரியை | நிலுவை வருவாயையும் வருவாயையும் அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| மில்லியன் தீர்வை நிலுவையிலிருந்தது. இந்நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு சகல உப அலுவலகத்திற்குரிய வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் நிலுவையில் ரூபா 767,393 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வாடகை வருவாயும் அனுமதிப்பத்திரக் கட்டணமும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் வாடகை வருவாயும் அனுமதிப் பத்திரக் கட்டணமும் முறையே ரூபா 1,986,894 மற்றும் ரூபா 237,664 ஆகவிருந்தது. | கணக்குகளைத் திருத்தம் செய்ய வேண்டும். | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வரியும் அறவிடப்படுவதாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2.3.4 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுர வருவாயை அறவிடுவதற்கு 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் உப விதிகள் தயாரிக்கப்படவில்லை. | உப விதிகள் தயாரிக்கப்படவோ பின்பற்றப்படவோ வேண்டும். | தற்சமயம் உப விதிகளைத் தயாரிக்கும் பணி நடைபெறுகின்றது. |
| (ஆ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அனுமதிப் பத்திரத்தைப் பெறக்கூடிய 182 இடங்கள் இனங்காணப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு 53 வியாபார நிறுவனங்களுக்கே சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய நிறுவனங்களுக்கு வர்த்தமானியின் பிரகாரம் சபை வழங்கப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெறுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. இவ்வியாபார நிறுவனங்கள் இயங்கவில்லை. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,332,740 ஆகும். | நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவிட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கென பதிவாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 30 பிரதான பணிகளை ஈடேற்ற உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 12 பணிகளுக்கே உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | தேவையான உபவிதிகளைத் தயாரிக்க வேண்டும். | எஞ்சிய உபவிதிகள் தயாரிக்கப்படும். |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் ஆற்றப்பட வேண்டிய 04 பணிகள் தொடர்பாக செயல் | நிலைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்கு செயல் நடவடிக்கைத் | செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | உப விதிகளுக்கு முதன்மையளித்து தயாரிக்க வேண்டும். |

**(இ) பொதுமக்களின் புகார்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளளிப்புச் சபை 789 புகார்களைப் பெற்றிருந்தது. தீர்வு காணப்படுவதில் 22 சதவீத முன்னேற்றமே இருந்தது. தலைமை அலுவலகத்தில் புகார்களுக்கான பதிவேடு இருக்கவில்லை. | பொதுமக்களின் புகார்கள் தாமதமின்றித் தீர்வு செய்யப்பட வேண்டும். | பல புகார்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. தொடர் நடவடிக்கைகளில் சிக்கல்கள் எழுந்துள்ளன. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்குககள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் உலகளாவிய சுட்டுக்களின் ஊடாக பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பொது மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நெடுங்காலத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தித் திட்டத்தை அமுலாக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்குமாறு வேண்டியவாறு 2019 - 2023 திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வீதி இன்வெண்டரியின் பிரகாரம் 495 வீதிகள் இருந்தன. 24 மாத்திரமே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. 10 வீதிகளுக்கும் குறைவாகவே நில அளவை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சகல வீதிகளுக்கும் நில அளவை மேற்கொள்ளப்பட வேண்டும். | மிகுந்த செலவு ஏற்படுமாதலால் 10 வீதிகளுக்கு மாத்திரமே இவ்வேலை நடைபெற்றுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த 495 வீதிகளிலும் 17,621 வீதி விளக்குகள் பொருத்தப்படுவதற்கு ரூபா 31.1 மில்லியன் செலவிடப்பட்டது. தேவையான வீதி விளக்குகள் மின் கம்பங்கள் என்பனவற்றின் தகவல்கள் பரிசீலிக்கப்படாது செலவிடப்பட்டிருந்தது. | பரிசீலனையின் பின்னரே வீதி விளக்குகளுக்கு செலவிடப்பட வேண்டும். | பூ்.ளு தொழில்நுட்பத்தின் மூலம் யூன் தொடக்கம் கம்பங்கள் இலக்கிடப்பட்டு வழங்குதலும் பொருத்துதலும் முறையாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 02 நூலகர் பதவிகளும் 2016 தொடக்கம் ஒரு முன்பள்ளி ஆசிரியர் பதவியும் ஒரு வாருவாய்ப் பரிசோதகர் பதவி 2013 தொடக்கமும் இருந்தன. 02 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி மிகையும் நிலவியது. | வெற்றிடம் நிரப்பப்பட்டு மேலதிகம் முறையாக்கப்பட வேண்டும். | முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்கு நிறைவேறும் வரை வருவாய்ப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட மாட்டாது. |
| (ஆ) | 2004 யூலை 09 ஆந் திகதிய டுபு.்.05.்.2004 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பிணை வைப்பு பிரகாரம் 6 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யப்படவில்லை. | ஊழியர் பிணை வைப்பு பெறப்பட வேண்டும். | பிணை வைப்பு வழங்காதோரிடம் அவை பெறப்படும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய 03 உப அலுவலகங்களில் 1998 ஆம் ஆண்டின் பின்னர் தீர்வை மதிப்பிடப்படவில்லை. அதனால் 12,997 கூறுகளிலிருந்து | புதிய மதிப்பீட்டின் படி தீர்வை அறவிடப்பட வேண்டும். | மஹர பிரதேசத்தில் தீர்வை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதற்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | நாளதுரையாக்கப்பட்ட வரியைப் பெற முடியவில்லை. | | அறவிடப்படும். |
| (ஆ) | நாரங்வல உப அலுவலகத்தில் விற்பனை வரி அறவிடப்படுகையில் விற்பனையின் 2 சதவீத வரி வருவாய்ப் பரிசோகரின் மதிப்பீட்டின் படி நடைபெற்றிருந்தது. உள்ளவாறான விற்பனை விலை கருத்திற் கொள்ளப்படவில்லை. | விற்பனை விலை அதிகரிப்புக்கு அமைய வரி நிறுவை அறவிடப்பட வேண்டும். | இந்த நிறுவனத்தால் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அதிகரிப்பு இருப்பின் நிலுவை அறவிடப்படும். |
| (இ) | அலுவலக நடவடிக்கை முகாமைத்துவத்திற்காக 2013 சனவரி 01 ஆந் திகதியன்று நெக்பா அவுஸ்திரேலியா, தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து, தீர்வை வரி, நானாவித வருவாய், கணக்கீட்டு நடவடிக்கைகள், கையிருப்புக் கட்டுப்பாடு, வீதி விளக்குகள், சம்பளம், கள முகாமைத்துவ மென் அணி முறைமை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,796 மில்லியன் செலவிடப்பட்டது. அதன்மூலம் 6 துறைமுகங்களது தரவுச் சேகரிப்பும் முகாமைத்துவம் நடைபெறுவது மூல நோக்கமாக இருந்த போதும், தீர்வை வருவாய் முகாமைத்துவம் மாத்திரமே நடைபெற்றிருந்தது. | ஆறு துறைகளுக்கும் இது பயன்படுத்தப்பட வேண்டும். | தீர்வை வரி முகாமைத்துவத்துக்குப் புறம்பாக சகல வருவாய்களுக்கும் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல், பி.ச 3 அறிக்கைகளைப் பெறுதல் ஆகியனவும் நடைபெற்றுள்ளன. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேல் மாகாண தலைமைச் செயலாளரால் 2013 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்டதும் ரூபா 870,000 கணக்கிலிடப்பட்டதுமான டிறக்டர் ஒன்றும் டிறெய்லர் ஒன்றும் | இச்சொத்துக்கள் சுவீகரிக்கப்பட வேண்டும். | வாகனச் சுவீகரிப்பிற்கான படிவம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

சுவீகரிக்கப்படவில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அமைச்சு சபையின் வேண்டுகோள் இல்லாது வழங்கிய 640 கல்வனைஸ்ட் குழாய்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இக்குழாய்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | பொது மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப கொடிக் கம்பமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. |
| (ஆ) | கழிவுப் பொருள் பிரிவில் 03 டிறெய்லர்கள் நெடுங்காலமாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. | இச்சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | டிறெய்லர் வீதிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும். |

### 3.5.3 வருடாந்த பொருள் / கையிருப்புக் கணிப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நேரடிப் பரிசோதனையின் போதும் வருடாந்தப் பரிசோதனையின் போதும் புலனாகாத ரூபா 112,400 மற்றும் ரூபா 4,148 மற்றும் ரூபா 35,200 பெறுமுதியான 10 குப்பை வண்டிகளும் 04 வீல் பெரோக்களும், 06 துவிச்சக்கர வண்டிகளும் மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கிலிடப்பட்டிருந்தன. | கணக்கில் திருத்தம் செய்யப்பட வேண்டும். | முறையான விதிமுறைகளுடன் எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நூலகப் புத்தக் கணிப்பு அறிக்கையின் பிரகாரம் ரூபா 141,714 பெறுமதியான 876 புத்தகங்கள் தொலைந்திருந்ததுடன் ரூபா 361,131 பெறுமதியான 1313 புத்தகங்கள் அங்கத்தவர்களால் திருப்பி அளிக்கப்பட்டிருந்தன. | இவை கண்டுபிடிக்கப்பட அல்லது நட்டம் அறவிடப்பட வேண்டும். | பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுப்பதுடன் திருப்பி அளிக்கப்படாத சில புத்தகங்களைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 பொருட் கொள்வனவு**

**3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பொருட் கொள்வனவு ஏஜன்சி சுற்றறிக்கை இலக்கம் 8 இன் 4.2.1(ஆ) மற்றும் (இ) என்பவற்றுக்கமைய பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் விரிவான வருடாந்தத் திட்டம் என்பன தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமும் விரிவான வருடாந்த திட்டமும் 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பொருட் கொள்வனவு ஏஜன்சி சுற்றறிக்கை இலக்கம் 8 இன் (ஆ) மற்றும் (இ) பிரகாரம் தயாரிக்கப்படும். |

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வீதிச் செயற்திட்டங்கள் 124 க்கு வழங்கப்பட்ட கொங்கிறீட் குற்றிகளின் தாங்கும் சக்தி ஆய்வுகூட பரிசோதனையால் உறுதி செய்யப்படாது ரூபா 34,947,169 வழங்கப்பட்டிருந்தது. | பரிசீலனை அறிக்கைப்படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | சகல செயற்திட்டங்களுக்கும் தாங்கும் சக்தி பரிசீலிக்கப்படுவதில்லை. கற்களின் நியமத்தின் தொழில்நுட்பம் உத்தியோகத்தர் திருப்தியடையாத போதே அவ்வாறு செய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டத்தில் 13 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாடாகிய ரூபா 13,849,000 சேமிப்புக்குள்ளானது. | வரவு, செலவுத் திட்ட நிதிஏற்பாடு முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலவினங்கள் 37 இன் சேமிப்பு ரூபா 24,891,200 ஆகும். இது 17 முதல் 96 சதவீதமானதாகும். | வரவு, செலவுத் திட்ட நிதிஏற்பாடு முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளில் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெறவில்லை. 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | குறித்தவாறு கூட்டங்கள் நடைபெற வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் குறித்தவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படும். |